**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 164/2023**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அரிச்சந்திரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 15th , 2025.

**(1 மற்றும் 9 வது எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மற்ற எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் எனது சித்தப்பா மகள். பட்டியல் சாட்சிகள் அருணாச்சலம் மற்றும் ஜாய்சொர்ணதேவி என் சித்தப்பா மற்றும் சித்தி. ஆஜர் எதிரிகளில் எதிரி மாரியப்பனை மட்டும் எனக்கு தெரியும். 30.06.2022 ம் தேதி, இரவு 10.00 மணிக்கு நான் தூங்கிக்கொண்டிருந்தபோது, அ.சா.1 எனக்கு போன் மூலம் அ.சா.1 ன் வீட்டிற்கு வருமாறு கூறினார். நான் உடனே அவரது வீட்டிற்கு போனேன். அங்கு வீட்டில் எனது சித்தப்பா மற்றும் சித்தி கை, கால் கட்டப்பட்டு, அவர்களது வாயில் வெட்டியால் முகம் தெரியாத அளவிற்கு

கட்டப்பட்டிருந்தது. எனது சித்தப்பா மற்றும் சித்தியை கட்டிப்போட்டு, வாயில் துணியை வைத்து விட்டு, சுமார் 100 பவுன் நகைகளை கொள்ளையர்கள் திருடிச் சென்றார்கள். எனது சித்திக்கு திருடர்கள் வாயை கட்டி போட்டதில் இரத்தம் வந்து கொண்டிருந்தது. இருவரையும் அருகிலிருந்த சி.ஜே என்ற தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் நீதிமன்றத்தில் கூறியவாறு தான் போலீஸ் விசாரணையின் போதும் கூறினேன். எனது சித்தப்பா வீட்டிலிருந்து எனது வீடு அரை பர்லாங் தொலைவில் உள்ளது. எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்று என்னால் துல்லியமாக கூறமுடியாது என்றால் 11.00 மணிக்குள் தகவல் வந்தது. உடனடியாக, நான் மட்டும் அங்கு சென்றேன் என்றால் சரிதான். எதிரி மாரியப்பன் எங்கள் உள்ளூரைச் சேர்ந்தவர் என்ற ரீதியில் அவரை தெரியும் என்றால் சரிதான். சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது சித்தப்பாவிடம் நான் கேட்டு, அவர் சொன்ன தகவலை போலீசாரிடம் கூறினேனா? என்றால் அது எனக்கு நியாபகமில்லை. புகார் கொடுப்பதற்கு நான் காவல்நிலையத்திற்கு உடன் செல்லவில்லை என்றால் சரிதான். எவ்வளவு நகை காணாமல் போனது என்று எனக்கு துல்லியமாக தெரியாது. 3 பேர் நகை காணாமல் போனது. காணாமல் போன நகை 100 பவுனுக்குள் இருக்கும். நான் வந்த பிறகு தான், மருத்துவமனைக்கு சித்தப்பா மற்றும் சித்தியை அழைத்து சென்றோம். நான் சொல்வது போல், சொன்ன நாள், நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் சம்பவயிடத்திற்கே

செல்லவில்லை என்றும், புகார்தாரர் எனது உறவினர் என்பதினால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல், எனது சித்தப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தால், அங்கு அழைத்து வந்தவர் என எனது பெயர் மருத்துவ ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.16 13:04:43 +0530